# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஆகஸ்ட் 7, 2021 Weekly E-paper • August 7, 2021




## தளபதி கலைஞர் ஆனார்!

சுப.வீரபாண்டியன்



### தலைவர் கலைஞரின் இரண்டாம் பாகம்

எழில்.இளங்கோவன்



### பாராட்டுக்குரிய செயல்!

தலையங்கம்



### என்ன சொல்லப்போகிறார்கள்?

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● ஆகஸ்ட் 7, 2021 Weekly E-paper ●August 7, 2021


## தளபதி கலைஞர் ஆனார்!

○ சுப.வீரபாண்டியன்



கலைஞரின் முகத்தைப் பார்த்துக்
கனிவுடைத் தமிழைக் கேட்டு
கலைஞரின் அருக மர்ந்து
கள்ளமில் சிரிப்பில் நீந்தி
கலைஞருள் கரைந்து போன
கழகத்தின் தொண்டர் கோடி
கலைஞரை இழந்தோம் இன்றோ
கடந்தன ஆண்டு மூன்று!

எழுத்தையே வாழ்வாய்க் கொண்டோர்
எழுதிய நூல்கள் தோற்க
எழுதியே குவித்தார் மேடை
இலக்கியம் படைத்த ளித்தார்
எழுபது படங்கள் தாண்டி
எழுதினார் கதைகள் என்றும்
பழுதிலா எழுத்தும் பேச்சும்
பாரினில் எங்கே பெற்றார்?

திரையிலே நடிப்ப வர்க்குத்
திசையெலாம் ரசிகர் உண்டு!
உரையிலே மயங்கிப் பல்லோர்
ஒருவர்க்கு ரசிக ரானார்
விரைவிலே அவர்கள் கட்சி
வீரராய் மாறி நின்றார்
கரையெலாம் மக்கள் கூட்டம்
கடலெனக் கலைஞர் வாழ்வு!

அடர்இருள் காட்டில் வந்த
அரியதோர் ஒளியைப் போலே
சுடரொளிக் கதிராய் ஆண்ட
தூயநம் கலைஞர் எங்கே?
தொடர்கதை யாக நாட்டைச்
சூழ்ந்திடு பகைகள் வென்று
தடைபல கடந்து வந்த
தளபதி கலைஞர் ஆனார்!



## கலைஞர் நினைவஞ்சலி

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

ஆகஸ்ட் ஏழு,
அந்தக் கணம்
ஆறாத ரணம் !

நலிவு நீங்கி
பொலிவு பெறுவாய்
என்று தானே
நம்பினோம்,
ஏன்னையா
எமைப் பிரிந்தாய்
மனம்
நொறுங்க வைத்தாய் !

விழி நீரும் வற்றி
ஆண்டுகள் மூன்றும்
ஆயிற்று !

அகவை ஐந்தில்
அய்யா
உன்னைக் கண்டேன்
அந்த நொடியே
உன்மேல் காதல் கொண்டேன் !

தந்தையும் தாத்தாவும் உன்னைத்
தலைவராய் அடையாளம் காட்டினர்.

அறிந்து கொண்டேன்
உன் ஆளுமையை,
உன் அறிவின் ஆழத்தை !

உன் எழுத்தை
வாசித்தேன் !

உன் குரலை
நேசித்தேன்!

உன் கொள்கையைச்
சுவாசித்தேன் !
உன் தமிழை
யாசித்தேன் !

என்னை
கன்னல் கவிதைகளைப்
பாட வைத்தாய்,
கவின்பேச்சில் பீடு நடை
போட வைத்தாய்,
இன்னும் பலப்பல
உன்னிடம் கற்றவை தானே
அனைத்தும் !

நான்கு தலைமுறையாய்
நாங்கள் ஏற்ற
தலைவன் நீயே !

குறிப்பறிந்து எங்கள்
குறைகளைத் தீர்த்த
எங்கள் தாயே
எங்கள் தமிழே
எங்கள் தலைவா

என் உயிர் வாழும் காலம்
உன் நினைவு
என்னை ஆளும் !!

# தலைவர் கலைஞரின் இரண்டாம் பாகம்

○ எழில்.இளங்கோவன்

பிற்காலச் சோழப் பேரரசுக்கு அடிகோலிய தஞ்சை அரசன் விஜயாலய சோழனுக்குப்பின் எழுச்சி பெற்ற சோழப் பேரரசில், பார்ப்பனர்களின் ஆதிக்கம் தலைதூக்கி ஆடியது. பார்ப்பனர்கள் வடபுலத்தில் இருந்து பல்லவர்களால் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள்.

ஆட்சி செய்தவர்கள் மன்னர்கள் என்றாலும், ஆட்சி செய்வதற்கு ஆலோசனைகள் சொல்லவும், வழி நடத்தவும் ‘மகாமந்திரி’களாக இருந்தவர்கள் பார்ப்பனர்களே. அரசின் அதிகாரம் மறைமுகமாகப் பார்ப்பனர்களிடம் இருந்தது. காரணம் அவர்கள் பிரம்மத்தோடு தொடர்புடைய கடவுளாகத் தம்மைக் காட்டிக்கொண்டார்கள்.

வருண பேதங்களால் பிரித்து வைக்கப்பட்ட மக்களை, கடவுள் என்ற பிம்பத்தைக் காட்டி அகவயமாகப் பயமுறுத்தி வைத்தார்கள் பார்ப்பனர்கள். அதற்காக அவர்கள் தேர்வு செய்த இடம் தான் கோயில்கள். மன்னர்களின் ஆதரவாலும், ‘பிராமணர்’ என்ற சாதி ஆதிக்கத்தாலும் கோயில்களில் எல்லாம் பூசாரிகளாக நுழைந்து அவர்களின் இருப்பைப் பலப்படுத்திக்கொண்டார்கள் பார்ப்பனர்கள்.

கோயில்களுக்குப் பார்ப்பனர்களால் தரப்பட்ட “புனிதம்” என்ற காரணத்தால் கருவறை வரை கூட சூத்திர மன்னன் போக முடியாது. ஆனாலும் அக்கோயில்களின் பராமரிப்புச் செலவுக்கு என்று வரியில்லா நிலங்கள் இறையிலியாகவும், தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு போன்ற பொருள்களாகவும் வாரி வழங்கினார்கள் மன்னர்கள்.

கடவுளுக்குப் பூசை செய்யும்போது மந்திரங்கள் சொல்ல வேண்டும் என்கிறது யஜுர்வேதம். ஆகவே கோயில்களில் பூசாரிகள் மந்திரமாக அர்ச்சனையைச் செய்தார்கள் மக்களுக்குப் புரியாத, அவர்களின் சமஸ்கிருத மொழியில்.

அதுமட்டும் இல்லாமல் கோயில்கள், அதன் சொத்துகள் அனைத்தும் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தன. இவைகளை வரையரை செய்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற காரணத்தினால் 1925ஆம் ஆண்டு, கோயில்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களை மேலாண்மை செய்ய, அன்றைய நீதிக்கட்சி அரசால் இந்து சமய அறநிலைய வாரியம் அமைக்கப்பட்டது. 1927 ஆம் ஆண்டு




இந்து சமயம் மற்றும் அற நிலையைச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னாளில் இந்து சமய அறநிலையத் துறையாக 1960 ஆம் ஆண்டு சனவரி திங்கள் முதலாம் நாள் அமைக்கப்பட்டு, பல கோயில்கள் அறநிலையத் துறையின் மூலம் அரசுக் கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

தலைவர் கலைஞரின் தி.மு.கழக ஆட்சியில் பல ஆண்டுகள் ஓடாமல், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருவாரூர்த் தேரை ஓடச் செய்ததைப் போல பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

தோழர் சுப.வீரபாண்டியன் சொல்வது போல, கலைஞரின் மறைவுக்குப் பின் அவரின் இரண்டாம் பாகமாக ஆட்சியில் இருக்கும் முதல்வர் ஸ்டாலின் அவர்களால் கோயில்கள் புதுப்பொலிவு பெறத் தொடங்கியுள்ளன. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களின் துடிப்பான செயல்பாடுகள் வியப்பில் ஆழ்த்துகிறது.

குறிப்பாகச் சொன்னால் “அன்னைத் தமிழில் அர்ச்சனை” என்று சொல்லி சமஸ்கிருத ஆதிக்கத்தை அகற்றித் தமிழைக் கருவறைக்குள் கொண்டு சேர்த்திருக்கிறார்கள் முதல்வரும், துறை அமைச்சரும்.

தமிழ்நாட்டுக் கோயில் கருவறையில் தமிழைக் கேட்க 1200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. முதல் தமிழ் அர்ச்சனையை மைலாப்பூரில் தொடங்கி வைக்கப்பட்ட பின்னர், இம்மாதத்திற்குள் 47 கோயில்களில் தமிழ் அர்ச்சனை கொண்டு வரப்படும் என்றும், பின்னர் 537 கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் சேகர்பாபு சொல்லியிருக்கிறார்.

திருவாவடுதுறை ஆதினம் உள்ளிட்டச் சமயமடங்களால் வரவேற்பைப் பெற்றிருக்கும் தி.மு.கழக ஆட்சியின் இச்செயல்பாடுகள் உரக்கச் சொல்கின்றன, “திராவிடம், திராவிட இயக்கம் இந்துக்களுக்கு எதிரி இல்லை” என்று. ●




## ● திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் கலைஞர் படத்திறப்பு



தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவையொட்டி, சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் படத்திறப்பையொட்டி 02-08-2021 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைமை அலுவலகத்தில் கலைஞர் படத்தைத் தோழர் சுப.வீரபாண்டியன் முன்னிலையில், அவைத் தலைவர் கயல் தினகரன் திறந்து வைத்தார்.

## ● சட்டமன்றத்தில் கலைஞர்




தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவையொட்டி தலைவர் கலைஞர் அவர்களின் படத்தை 2-8-2021 அன்று சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஒன்றிய குடியரசுத் தலைவர் திறந்து வைத்தார். அப்போது ஆளுநர் பன்வாரிலால், பேரவைத் தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பாராட்டுக்குரிய செயல்!



பெரியார்



சவுந்தர பாண்டியனார்

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் வெளிவரும் ஒன்று முதல் 12ஆம் வகுப்புப் பள்ளிப் பாடநூல்களில், தலைவர்களின் பெயருக்குப்பின் இருக்கும் சாதிப் பெயர்கள் நீக்கப் பட்டிருக்கின்றன என்ற செய்தி தேனாய்த் தித்திக்கிறது.

தமிழ்நாட்டில் சாதிக்கு எதிராகச் சமூகப்போராட்டத்தை முன்னெடுத்தவர், போராடியவர் ஐயா தந்தை பெரியார்.

1929ஆம் ஆண்டு பிப்ரவரி 17, 18 தேதிகளில் செங்கல்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மாநாட்டில் மக்கள் தங்கள் பெயர்களில் இருக்கும் சாதிப் பெயர்களை நீக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியவர் பெரியார்.

அந்த மாநாட்டிலேயே பெரியார், சவுந்தர பாண்டியனார் உள்ளிட்ட தலைவர்கள் தங்கள் பெயரில் இருந்த சாதிப் பெயரைத் தூக்கி எறிந்தனர்.

எம்.ஜி.ஆர் தன் ஆட்சிக் காலத்தில் தெருப்பெயர்களில் இருந்த தலைவர்களின் சாதிப் பெயர்களை நீக்கி அரசாணை பிறப்பித்தார்.

சாதிகள் ஒழிய வேண்டும் என்பது நமது கொள்கை. அதற்காகப் பாடப்புத்தகங்களில் இருந்து சாதிப் பெயரை எடுத்து விட்டால் சாதி ஒழிந்து விடும் என்று கூற வரவில்லை.

கல்வி கற்கும் மாணவப் பருவத்தில் அவர்கள் நெஞ்சில் சாதி எனும் நச்சு விதை விழாமல் தடுக்கவும் - சாதியத்திற்கு எதிரான ஓர் அடையாளமுமாக, தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தின் மூலம் அரசு எடுத்திருக்கும் இந்த முயற்சி மிகவும் பாராட்டுக்கு உரியது ●

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# என்ன சொல்லப்போகிறார்கள்?

○ மா.உதயகுமார்

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து எதிர்க்கட்சிகளால் முடக்கப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசும்எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் கடந்த மூன்று வாரங்களாகத் தொடர்ந்து ஒத்திவைக்கிறது. உளவுபார்ப்பு, புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து டெல்லியில் விவசாயிகள் போராட்டம், விலைவாசி உயர்வு, பெட்ரோல் டீசல் எரிவாயு விலை உயர்வு, கொரோனா பாதிப்பு எனப் பற்றி எரியும் விவகாரங்களால் நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுக் கொந்தளிக்கின்றனர். இந்த நேரத்தில் இவை எவற்றுக்கும், ஒரு பொறுப்பான அரசாக, எந்தப் பதிலும் கூற முன்வராமல் பிரதமரும் உள்துறை அமைச்சரும் அமைதி காப்பது அவர்கள் மக்களை மக்களாகத்தான் மதிக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது.



மிகவும் தைரியமானவர்கள், துணிச்சலாகப் பதிலடி கொடுப்பவர்கள் என்று தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்பவர்களின் தைரியமும் துணிச்சலும் எதிர்க்கட்சிகளுக்குப் பதில் சொல்லும்போது என்ன ஆயின என்பது தெரியவில்லை.

“வீர” சாவர்க்கர் வழி நடப்பவர்கள். இவர்கள் “வீர” வரலாறு நாடறிந்த ஒன்று. அதைக் காண்கிறோம் நாடாளுமன்றத்தில் இன்று.

சட்டத்திற்கு எதிராக மட்டுமன்று அடிப்படை மனித உரிமைகளுக்கும் எதிரானது உளவுபார்ப்பு. ஒட்டுக்கேட்பு விவகாரத்திற்கு எதிராக ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் இன்று வலுவாகக் கேள்வி எழுப்புகிறார்கள். விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கிறார்கள். விலைவாசி உயர்வு மக்களை அயர்வுக்கு உள்ளாக்கியிருக்கிறது.

ஆனால் அவைகளுக்குப் பதில் சொல்லாமல் நாடாளுமன்ற அவைகளை ஒத்தி வைத்துக் கொண்டே போகிறது பாஜக.

கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் ஒத்திவைப்பதற்கு எதற்காக மேலும் 20,000 கோடி ரூபாய் செலவழித்து சென்ட்ரல் விஸ்தா என்ற புதிய நாடாளுமன்றக் கட்டிடம் கட்ட வேண்டும்?

அரசின் தவறுகளை அவையின் உறுப்பினர்கள் எதற்காகச் சுட்ட வேண்டும்?

சட்டங்களை மட்டும் நிறைவேற்றிக் கொள்வதானால் அதைச் செய்துவிடலாமே நேரடியாக!

எதேச்சதிகாரத்தை நிறுவிடலாமே ஒரேயடியாக!

பெகாசஸ் உளவுபார்ப்பு விவகாரம் தொடர்பாக மூத்த செய்தியாளர்கள் என்.ராம், சஷி குமார், எடிட்டர்ஸ் கில்ட் ஆப் இந்தியா உள்ளிட்டோர் உச்ச நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். இதே விவகாரம் தொடர்பாக ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வழக்கில் ஒன்றிய அரசு தரப்பும் ஆஜராகவேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் எழுப்பியக் கேள்விகளுக்கு எந்தப் பதிலும் இல்லை. நீதிமன்றத்தில் என்ன சொல்லப்போகிறார்கள்?

இதே போன்ற ஒட்டுக்கேட்பு விவகாரம் அமெரிக்காவில் வாட்டர்கேட் ஊழலாக உருவெடுத்த போது அந்த விசாரணையில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட அதிபர் நிக்சன் பதவி விலகினார். அமெரிக்க வரலாற்றில் “*Impeach*” செய்யப்பட்டு பதவி விலகிய ஒரே ஒரு அதிபர் நிக்சன் ஆவார். நம்முடைய நாட்டிலும் உச்சநீதிமன்றம் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்திருக்கிறது. வரலாற்றில் என்ன பதிவாகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். ●

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian